வானவில்
VAANAVIL
ISSUE – 72 DECEMBER 2016
இதழ் – 72 மார்கழி 2016

# ஒற்றையாட்சிக்குள் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சாத்தியமில்லை!




இலங்கையில் புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்கும் வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. இதற்காக 225 பேர் கொண்ட நாடாளுமன்றம் அரசியலமைப்பு சபையாக மாற்றப்பட்டுள்ளது. இந்தச் சபை ஆறு குழுக்கள் புதிய அரசியல் யாப்பு சம்பந்தமாக சமர்ப்பித்துள்ள பரிந்துரைகளை ஆராய்ந்து ஆலோசனைகளைச் சமர்ப்பிக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறப்போவது புதிய அரசியல் யாப்பு ஒன்றை அறிமுகப்படுத்தும் நிகழ்வா அல்லது பழைய யாப்பில் சில திருத்தங்களை மேற்கொள்ளப் போகும் நிகழ்வா என்பதில் இன்னமும் குழப்பம் நிலவுகின்றது.

எதைச் செய்வதாக இருந்தாலும் சில அடிப்படைச் சூழ்நிலைகள் அவசியமானவை. முதலாவதாக, இன்றைய ஐ.தே.க. - சுதந்திரக் கட்சி கூட்டு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதான கட்சிகளும் ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டும். இரண்டாவதாக, உண்மையான எதிர்க்கட்சியாகச் செயற்படும் சுமார் 55 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு எதிரணி அந்த உடன்பாட்டை ஏற்க வேண்டும். மூன்றாவதாக இனப் பிரச்சினை விவகாரத்தில் தமிழர் தரப்பு பிரதிநிதியாக இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதற்கு இணங்க வேண்டும். நான்காவதாக, முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அதை ஆதரிக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் தவிர தமிழர்களுக்கு சமவுரிமை வழங்கப்பட வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, தீர்வு முயற்சிகள் நடைபெறும் போதெல்லாம் ஏதாவது சாக்குப் போக்கு சொல்லி அதைக் குழப்பி அடிக்கும் ஜே.வி.பியும் கூட அதற்கு உடன்பட வேண்டும்.

ஏனெனில் இன்றைய இலங்கை அரசியலில் இந்த அரசியல் சக்திகளே ஏதோவொரு விதத்தில் அரசியலைத் தீர்மானிக்கும் சக்திகளாக இருக்கின்றன.

இதுதவிர, புதிய அரசியல் யாப்போ அல்லது சீர்திருத்தமோ நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். அத்துடன் அது மக்களின் கருத்துக் கணிப்பில் வெற்றி பெறவும் வேண்டும்.

முதலில் தமிழர் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை எடுத்துப் பார்த்தால் இனப் பிரச்சினை

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# ஆறு ஆண்டுகளாக வெளிவரும் ‘வானவில்’

இரண்டாயிரத்து பதினோராமாண்டு தை மாதம் ‘வானவில்’லின் முதலாவது இதழை வெளிக்கொணர்ந்த போது எங்கள் முன், ‘தமிழ் மக்களிடையே அரசியல் ரீதியாக என்ன தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறோம்’ என்றதொரு பாரிய சவால் இருந்தது. ஆனால் இப்போது திரும்பிப்பார்க்கும் போது ‘வானவில்’ அரசியல் ரீதியாக வலுவானதொரு தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது என்பதை எங்கள் கண்கூடாகக் காண்கின்றோம். அத்துடன் இலங்கை உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியான நிலைமைகள் தொடர்பாக ‘வானவில்’லின் அரசியல் கண்ணோட்டத்தோடு பலரை உடன்பாடு கொள்ளவும் வைத்துள்ளோம். அதேநேரத்தில் ‘வானவில்’லில் வெளியாகும் கருத்துக்களுடன் உடன்படாது கொள்ள முடியாதவர்கள் கொதித்துச் சீற்றங்கொள்வதைக் கண்ணுறும் போது, ‘வானவில்’ தனது நோக்கத்தை சிறப்பாக செவ்வனே செய்து வருவதாகவே நாங்கள் கருதுகிறோம்.

கடந்த பல தசாப்தங்களாக இலங்கையின் தமிழ்ப் பத்திரிகையியல் வரலாற்றினை திரும்பிப்பார்த்தால் ஏராளமான பத்திரிகைகள், (உள்நாட்டு யுத்தம் ஆரம்பிப்பிற்கு முன்னும் பின்னும்) வெவ்வேறு காலகட்டங்களில் வெளிவந்து மறைந்துள்ளன. அவற்றில் வணிக நோக்கமற்று, மக்களுக்கு சரியான கருத்துக்கள் சென்றடைய வேண்டுமென்ற நோக்கில் வெளிவந்து இடையில் நின்றுபோன பத்திரிகைகளே அதிகம். இந்த ஆரோக்கியமற்ற, மிகவும் துயரமான நிலைமை இன்னமும் தொடரத்தான் செய்கின்றது. தூய வியாபார நோக்கோடு, மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டுமென்ற சிந்தனையில்லாமல், எந்தவிதமான இலக்குமின்றி ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகள் இன்னமும் வெளிவந்து கொண்டுதானிருக்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிகைகள் மக்களின் இரசனைக்கு தீனி போடுவதை மாத்திரமே நோக்கமாக்கக் கொண்டன. இதனால் ‘பணமிருந்தால் பத்திரிகை ஆரம்பிக்கலாம், பிழைக்கத் தெரிந்தால் நின்று பிடிக்கலாம்’ என்ற தாரக மந்திரத்தோடு வெளிவரும் ஜனரஞ்சக பத்திரிகைகள் வழங்கும் பணத்திற்காக எழுதும் வகையறாக்களையே ‘பத்திரிகையாளர்கள்’ என விழிக்கும் போக்கும் உள்ளது.

தொடர்ச்சியாக சரியான கருத்துக்களை முன்வைத்து மக்களை சரியான பாதையில் வழிநடாத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு வெளிவரும் பத்திரிகைகளில் ஒன்றாகவே ‘வானவில்’ எப்போதும் தன்னை அடையாளப்படுத்துகிறது. இதனால் வியாபார ஊடகங்களை மாத்திரமே ஊடகங்களாக எண்ணும் உலகில் வாழ்பவர்களால், ‘இதனால் தமிழ் மக்களுக்கு என்ன பிரயோசனம்?’ என்ற கேள்விக்கு ‘வானவில்’ உள்ளாகின்றது. இதனை எங்கள் காதுகளால் கேட்டுமுள்ளோம். வியாபார ஊடகங்கள் மீதே எப்போதும் சாதாரண மக்கள் பெருவாரியாக நாட்டங்கொள்கின்றனர், எனவே மாதம் ஒருமுறை வெளியாகும் ‘வானவில்’ போன்ற சிறுபத்திரிகையால் ஒருபோதும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாதென்பதே இந்தக் கேள்வியின் தொனியாக உள்ளது. இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் வியாபார ஊடகங்கள் ஒட்டுமொத்த சமூகத்தையும் தேசத்தையும் தவறாக வழிநடாத்துவதைக் கைகட்டிக் கொண்டு பார்த்துக்கொண்டு பேசாமலிருங்கள், தமிழ்ச்சமூகம் ஒருபோதும் திருந்தப்போவதில்லை என்றெல்லாம் வழங்கப்படும் இலவச ஆலோசனைகளை நாங்கள் நீண்ட காலமாக புறங்கையால் தட்டப் பழகிவிட்டோம்.

புலிகளை போரில் வெல்ல முடியாது, புலிகளை அழிக்கமுடியாது, சிங்களப் பெருந்தேசியவாதத்திற்கு பதில் கூறக்கூடியவர்கள் புலிகள் மாத்திரமே என்ற நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் இலங்கை அரசியலில் சுமூக நிலை இன்னமும் ஏற்படவில்லை. யுத்தம் மூண்டதற்கான அடிப்படை அரசியல் காரணிகளை தத்தமது தேசியவாத கருத்து நிலைகளிலிருந்து (‘பிரிவினைவாதம்’ என்று ஒருசாராரும் ‘தனிநாட்டுப் போராட்டம்’ என்று மறுசாராரும்) அணுகும் சூழல் தொடர்ந்தும் நீடிப்பதால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான பொதுவானதொரு அரசியல் தீர்வு இன்னமும் எட்டப்படவில்லை. அத்துடன் சிங்கள, தமிழ், முஸ்லீம் பாராளுமன்ற அரசியல் கட்சிகள் அரசியல் தீர்வினை (100 நாட்களுக்குள், இந்த வருடத்திற்குள், அடுத்த வருடத்திற்குள் தீர்வு!) வைத்தே தமது பிழைப்பை நடாத்த வேண்டி இருப்பதால், தீர்வொன்று காணப்படாமல் இழுபறிப்பட்டு போவது அவர்களுக்கு வாய்ப்பாகவும் உள்ளது. இவ்வாறான சிங்கள – தமிழ் – முஸ்லீம் கட்சிகளின் கூட்டு ஏமாற்று அரசியலை தொடர்ந்து அம்பலப்படுத்துவதிலும் ‘வானவில்’ பெரும் பங்காற்றி வருகின்றது.

‘வானவில்’லின் கருத்துக்களோடு முரண்படுபவர்கள் பகிரங்கமாக ‘வானவில்’லிற்கும், பொதுவெளியில் எங்கேனும் தங்கள் கருத்துக்களை நேர்மையாவும் நாகரிகமாகவும் முன்வைக்கலாம். அவ்வாறான விமர்சனங்கள் எங்களை செழுமைப்படுத்துவதோடு, தமிழ்ப்பத்திரிகை உலகிற்கும் ஆரோக்கியமானதாகும்.

---

## வானவில்

**தொடர்பு முகவரி:** ‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# வடக்கு முதல்வரின் விபரீதமான போக்கு!




**வ**டக்கு முதலமைச்சர் சி.வி.விக்கேஸ்வரன் தெரிவித்து வரும் கருத்துக்கள் நாட்டு மக்கள் மத்தியில் அவர் பற்றிய குழப்பங்களையும், சந்தேகங்களையும் அடிக்கடி ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் அவர் ஒரு பிரிவினைவாதி என்ற கருத்தை படிப்படியாக ஏற்படுத்தி வருகிறது.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களுக்கும், போதைப் பொருள் பாவனைக்கும் அங்கு நிலைகொண்டு இருக்கும் இராணுவத்தினரே காரணம் என முதலமைச்சர் பகிரங்கமாகக் குற்றம்சாட்டி வருகின்றார். அவரது குற்றச்சாட்டு சம்பந்தமாக அவரை ஆதரிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்போ அல்லது கூட்டமைப்பு ஆதரிக்கும் 'நல்லாட்சி' அரசாங்கமோ வாய் திறக்காது மௌனம் காத்து வருகின்றனர். இந்த மௌனம் அவரது கருத்துக்கான சம்மததோ என்ற சந்தேகம் பொதுமக்களிடம் எழ வாய்ப்பளித்துள்ளது.

ஆனால் இன்றைய 'நல்லாட்சி' ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் இப்போதுள்ளதை விட அதிக தொகையான இராணுவத்தினர் வடக்கில் நிலை கொண்டிருந்தனர். அதன்படி இப்போதையதை விட அப்போது குற்றச் செயல்கள் அதிகமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக முன்னைய அரசாங்க காலத்தில் குற்றச் செயல்கள் வடக்கில் தற்போதையதை விடக் குறைவாக அல்லவா இருந்தது. இது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

**சுப்பராஜன்**

எனவே பிரச்சினைக்குக் காரணம் வேறு எங்கோ இருக்கிறது. அதாவது நேரடியாகச் சொல்வதானால், வடக்கின் இன்றைய நிலைமைக்கு சட்டம் ஒழுங்கைப் பேண வேண்டிய அரசாங்கமும், அந்த அரசை வெளிப்படையாக ஆதரித்து நிற்கும் வடக்கின் 'ஏகப் பிரதிநிதிகளான' தமிழ் தேசியக் கூட்டமைப்பும்தான் உண்மையில் பொறுப்பேற்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் ஏதும் வராத நிலையில் வடக்கு முதலமைச்சர் இராணுவத்தை மட்டும் எடுத்ததற்கெல்லாம் குற்றம் சாட்டுவது, அநாவசியமான முறையில் இராணுவத்துக்கும், வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் விடயமல்லவா?

இது ஒருபுறமிருக்க, வடக்கின் முதலமைச்சர் என்ற முறையில் வடக்கின் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் அவரது கட்சி ஆதரிக்கும் 'நல்லாட்சி' அரசாங்கத்திடமிருந்து உதவியைக் கோரிப் பெறுவதை விடுத்து, வெளிநாடுகள் வந்து வடக்கின் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென அண்மையில் தன்னைச் சந்தித்த பிரித்தானிய அரசின் பிரதிநிதியிடம் வடக்கு முதலமைச்சர் கோரி இருக்கிறார். முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியான வடக்கு முதலமைச்சரின் இந்தக் கோரிக்கை எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது, விபரீதமானது, எவ்வளவு ஆபத்தானது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

எந்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து இலங்கை மக்கள் பல இன்னல்களுக்கிடையில் போராடிச் சுதந்திரம் பெற்றார்களோ, அந்த பிரித்தானியர் வந்து வடக்கின் சட்டம் ஒருங்குப் பிரச்சினையை சீர்செய்ய வேண்டும் எனக் கோருவது ஆபத்தானது என்பது ஒருபுறமிருக்க, எவ்வளவு தூரம் முதலமைச்சரின் ஏகாதிபத்திய விசுவாசம் சம்பந்தப்பட்டது என்பதையும் பார்க்க வேண்டும். இந்த ஏகாதிபத்திய விசுவாசம் முதலமைச்சர் சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. அவர் சார்ந்து நிற்கும் பிற்போக்கு தமிழ் தலைமைக்கு ஏகாதிபத்திய விசுவாசம் சம்பந்தமான ஒரு நீண்ட வரலாறு உண்டு.

தமிழர்களின் முதல் அரசியல் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் கடைந்தெடுத்த ஏகாதிபத்திய விசுவாசியாகவும், சாதி வெறி பிடித்த வடக்கு நிலப்பிரபுத்துவத்தின் பிரதிநிதியாகவும் செயல்பட்டவர். 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்ற கோசத்தை முழக்கி தமிழ் மக்களை உசுப்பேத்தி அரசியல் ஆதாயம் தேடிய அவர், நடைமுறையில் அதற்கு எதிராகவே செயல்பட்டவர். அதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம்.

1956இல் ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் அரசாங்கம் 'சிங்களம் மட்டும்' சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தபொழுது, அதை எதிர்த்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தமிழையும் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இயக்கம் நடாத்தியது.

அந்தக் கோரிக்கையை வலுப்படுத்தும் நோக்கத்துடன் யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் ஒரு சர்வகட்சி கலந்தாலோசனைக் கூட்டத்துக்கு சகல கட்சிகளுக்கும் கம்யூனிஸ்ட் கட்சி அழைப்பு விடுத்தது. அந்த அழைப்புக்கு பதிலளித்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம், தனது கட்சி ஆங்கிலத்தையே ஆட்சி மொழியாக விரும்புவதால், அந்தக் கூட்டத்துக்கு வர முடியாது என அறிவித்து தனது ஆங்கில ஏகாதிபத்திய விசுவாசத்தை வெளிப்படையாகவே காட்டிக் கொண்டார்.

பின்னர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரசை விட்டு விலகி எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் அவரது சகாக்களும் தமிழரசுக் கட்சியை உருவாக்கினர். அவர்களாவது பொன்னம்பலத்தின் பாதையை விட்டு விலகி செயல்பாட்டார்களோ என்றால் அதுதான் இல்லை. பொன்னம்பலத்தை விட ஒருபடி மேலே சென்று தமிழர்களை உசுப்பேத்தி அரசியல் செய்த அவர்கள், பொன்னம்பலத்தை விட மோசமான ஏகாதிபத்திய தாசர்களாகச் செயல்பட்டார்கள். அதற்கும் ஒரு உதாரணம் உண்டு.

1956இல் பதவிக்கு வந்த பண்டாரநாயக்கவின் அரசாங்கம், மொழிப் பிரச்சினையில் தவறிழைத்தாலும், நாட்டின் நலன் கருதி பல ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதில் ஒன்று, திரிகோணமலையில் இருந்த பிரித்தானிய கடற்படைத் தளத்தையும், கட்டுநாயக்கவில் இருந்த பிரித்தானிய விமானப்படைத் தளத்தையும் வெளியேற்றியமையாகும். இந்தத் தேசபக்த செயலை நாட்டு மக்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் ஆதரித்தனர். ஆனால் தமிழரசுக் கட்சி மட்டும் அதை எதிர்த்தது. பிரித்தானிய படைத் தளங்களை அகற்ற வேண்டாம் எனக் கோரி செல்வநாயகம் பிரித்தானிய அரசி எலிசபெத்துக்கு தந்தி அனுப்பி தமது பிரித்தானிய ஏகாதிபத்திய விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்.

அதாவது, இந்தியாவின் காந்தி, "வெள்ளையனே வெளியேறு" என இந்திய சுதந்திரத்துக்கு குரல் எழுப்ப, 'ஈழத்துக் காந்தி' என தனக்குப் பெயரை வைத்துக்கொண்ட செல்வநாயகம், "வெள்ளையனே வெளியேறாதே" எனக் கோசமெழுப்பினார்! என்னே இவர்களது நாட்டுப்பற்று!

அதுமட்டுமன்று. இனப் பிரச்சினை தீவிரமடைந்த பின்னர், அந்தப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வுகாண வேண்டும் என வலியுறுத்தி வந்த தென்னிலங்கையின் முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து செயல்பட விரும்பாத தமிழ் தலைமைகள், இந்தப் பிரச்சினையை உருவாக்கிய பிரித்தானியாவுக்கும், அமெரிக்கா, இந்தியா போன்ற ஆதிக்க நோக்கம் நாடுகளுக்கும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி அடிக்கடி அழைப்பு விடுத்தன. அவைகள் ஒருபோதும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உதவும்படி அணிசேரா இயக்கத்துக்கோ, சோவியத் யூனியன், சீனா போன்ற சோசலிச நாடுகளுக்கோ, உலகின் வேறு எந்தவொரு நடுநிலைமையான நாடுகளுக்கோ அழைப்பு விடுத்தது கிடையாது. அதன் மூலம் தொடர்ச்சியாக தமது ஏகாதிபத்திய விசுவாசத்தையே காட்டி வந்திருக்கின்றனர்.

எனவே முன்னைய தமிழ் தலைமைகளின் வழியைப் பின்பற்றியே தற்பொழுது வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனும் வெளிநாடுகள் வந்து வடக்கின் சட்டம் ஒழுங்கு நிலைமையைப் பேண வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருக்கிறார் இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. ஆனால் இவர்கள் அரசியல் ஆதாயம் கருதிச் செய்யும் செயல்கள் ஆபத்தான நிலையையே உருவாக்குகின்றன.

சிங்களப் பேரினவாதிகளும், அரசாங்கங்களும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுக்கிறார்கள் எனத் தொடர்ச்சியாகக் குற்றம்சாட்டி வரும் இவர்கள், மறுபக்கத்தில் இந்த மாதிரியான தேசத்துரோகக் கோரிக்கைகளை முன்வைத்து, சிங்கள மக்கள் மத்தியில் சந்தேகங்களை உருவாக்கி, இனப் பிரச்சினைத் தீர்வுக்கான சூழலை இல்லாமல் செய்கிறார்கள் என்பதே உண்மையாகும். அன்றிலிருந்து இன்று வரை தமிழ் தலைமைகள் செய்து வந்த நடவடிக்கைகளை எடுத்து நோக்கினால், சிங்களப் பேரினவாதிகளின் நடவடிக்கைகளுக்கான சூழலை உருவாக்கிக் கொடுத்தவர்கள் இவர்களே என்பது புலனாகும்.

தற்போதைய சூழலில் தமிழ் இனவாதத்தை கிளறுவதன் மூலம், இனப் பிரச்சினைக்கான தீர்வைத் தள்ளிப்போக வைக்கும் செயல்பாட்டில் வடக்கு முதலமைச்சர் முன்னணியில் நிற்பது, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் துாரதிஸ்ட நிலைமையாகும்.

# 19 பேர்களின் பெயர்களை "தேசத்துரோகிகள்" பட்டியலிலிருந்து ஜனாதிபதி நீக்கினார்!

'வானவில்' கடந்த இதழில் (கார்த்திகை – 2016) 'சுதந்திரப் போராளிகளை "தேசத் துரோகிகளாக" குறிசுட்ட பிரித்தானிய ஏகாதிபத்தியம்' என்ற தலைப்பில் செய்தியொன்றை வெளியிட்டிருந்தோம். அதில் இலங்கையை பிரித்தானியர் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் அவர்களுக்கு எதிராக சுதந்திரப் போராட்டம் நடாத்திய பலரை பிரித்தானிய காலனித்துவ அரசு துாக்கிலிட்டுக் கொன்றதுடன், அவர்களில் 19 பேரை தேசத் துரோகிகளாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தியதையும் குறிப்பிட்டிருந்தோம். இந்த விடயம் குறித்து ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபித்ததையும் சுட்டிக்காட்டி இருந்தோம்.

இந்த விடயத்தை கவனத்தில் எடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது அதிகாரத்தை பயன்படுத்தி இந்த 19 பேரின் பெயர்களையும் தேசத்துரோகிகள் பட்டியலிலிருந்து டிசம்பர் 8ஆம் திகதி நீக்கியுள்ளார். அவரது இந்த நடவடிக்கையை 'வானவில்' வரவேற்கிறது. அதேநேரத்தில் பிரித்தானிய அரசும் அவர்களை தேசத் துரோகப் பட்டியலில் இருந்து நீக்கியுள்ளதா என்பது தெரியவில்லை. அவ்வாறு செய்திருக்காவிடின் பிரித்தானிய அரசை அவ்வாறு செய்யும்படி நிர்ப்பந்திக்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு.

# ஆனையிறவு உப்பளத்தை தனியார்மயப்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்தை முறியடிக்க வேண்டும்!

இலங்கையின் தற்போதைய 'நல்லாட்சி' அரசாங்கம் நாட்டின் பொதுச் சொத்துக்களை ஒன்றன் பின் ஒன்றாக தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதன் வரிசையில் தற்போது ஆனையிறவு மற்றும் அதற்கு அருகில் இருக்கும் குறிஞ்சாதீவு உப்பளங்களைத் தனியாருக்கு தாரை வார்க்கும் முயற்சிகளில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இலங்கையில் ஆனையிறவு, அம்பாந்தோட்டை, புத்தளம் - பாலாவி, மன்னார், செம்மணி, கல்லுண்டாய் ஆகிய பகுதிகளில் உப்பளங்கள் இருக்கின்றன. இவற்றில் ஆனையிறவு உப்பளமே மிகப்பெரியது. பல மைல் சுற்றளவில் அமைந்துள்ள இந்த உப்பளத்தில் சுமார் 25 அயல் கிராமங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து தமது வாழ்க்கையை நடாத்தி வந்தனர்.

வெற்றிகரமாக இலாபத்தில் இயங்கிய நிறுவனங்களில் இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான உப்பளங்கள் முன்னணியில் இருந்தன. மிகவும் தரம் வாய்ந்த ஆனையிறவு உப்பு ஒரு கட்டத்தில் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணியையும் ஈட்டிக் கொடுத்தது. உப்பளங்கள் இலாபத்தில் இயங்கிய போதும் அவற்றில் வேலை செய்த தொழிலாளர்களின் வாழ்க்கை ஏறக்குறைய மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலையிலேயே இருந்து வந்தது.

ஆனால் எப்பொழுது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி தனது இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் கீழ் இலங்கை உப்புத் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் ஒரு தொழிற்சங்கத்தை அமைத்ததோ, அதன் பின்னர் நிலைமைகள் மாறத் தொடங்கின. தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு, சம்பளத்துடனான விடுமுறை, தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைகள், விபத்து நஸ்டஈடு, பெண்



தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய பிரசவ விடுமுறை உட்பட அநேகமான கோரிக்கைகளை தொழிற்சங்கம் வென்றெடுத்துக் கொடுத்தது.

## நல்லதம்பி

அரசுக்கும் புலிகளுக்கும் போர் நடைபெற்ற காலத்தில் ஆனையிறவு உப்பளம் பெரும்பாலான காலங்களில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோதும் அவர்களால் அதை இயக்க முடியவில்லை. பல ஆண்டுகளாக உப்பளம் மூடியே கிடந்தது. அதில் வேலை வெய்த தொழிலாளர்களும் வேலை இழந்து வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்கு அல்லாடினர்.

போர் முடிவுற்ற பின்னர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான முன்னைய அரசாங்கம் வடக்கிலிருந்த பெரும் தொழில் நிறுவனங்களான ஆனையிறவு உப்பளம், காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இராசயன தொழிற்சாலை என்பனவற்றை மீளவும் இயக்கும் முயற்சிகளை ஆரம்பித்தது. அதனால் இந்த நிறுவனங்களில் முன்னர் வேலை செய்தவர்களும், அவர்களின் வாரிசுகளும் தமக்கு மீண்டும் ஒரு பொற்காலம் உருவாகின்றது என எண்ணி மகிழ்ந்தனர். ஆனால் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து தற்போதைய மைத்திரி – ரணில் அரசாங்கம் பதவிக்கு வந்ததும் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது.

தற்போதைய அரசாங்கம் மிகவும் இலாபம் ஈட்டித் தரக்கூடிய ஆனையிறவு – குறிஞ்சாதீவு உப்பளங்களை தனியாருக்கு தாரை வார்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதை அறிந்த உப்பளத் தொழிலாளர்கள் அரசாங்கத்தின் முயற்சிக்கு தமது வன்மையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தமது எதிர்ப்பை தெரிவிக்கும் பொருட்டு இத்தொழிலாளர்கள் அண்மையில் இயக்கச்சியில் ஒன்றுகூடி ஆலோசனை நடாத்தியுள்ளதுடன், ஆனையிறவு உப்பளத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். உப்பளம் தனியார்மயப்படுத்துவதை எதிர்த்து தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கும் மகஜர்களை ஜனாதிபதி பிரதமர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

உப்பளத் தொழிலாளர்கள் மேற்கொண்டு வரும் இப்போராட்டத்தை தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லிக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இன்று வரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஏனையோரும் அதுபற்றி அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை.

வழமையாக தரகு முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வரும் சந்தர்ப்பங்களில் இவ்வாறான தனியார்மயப்படுத்தல் நடைபெறுவது வழமை. அதற்குக் காரணம் பொதுமக்களின் நலன்களை விட பெரும் முதலாளிகளுக்குச் சேவை செய்வதே ஐ.தே.கவின் கொள்கையாகும்.

ஆனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் இதற்கு நேர்மாறான கொள்கையையே பின்பற்றி வந்தன. பண்டாரநாயக்கவினதும், அவரது துணைவியார் சிறீமாவோ பண்டாரநாயக்கவினதும் ஆட்சிக் காலங்களிலேயே பெரும்பாலான அந்நியக் கொம்பனிகள் தேசியமயமாக்கப்பட்டன. அதன் மூலம் நாடு பெரும் பொருளாதார நன்மையைப் பெற்றது.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னைய ஜனாதிபதி சந்திரிகவும் சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினரை ஐ.தே.க தலைமையிலான தற்போதைய அரசுடன் இணைத்தின் மூலம் ஐ.தே.கவின் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்து வருகின்றனர். அதன் மூலம் சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கும், நாட்டு மக்களுக்கும் துரோகம் இழைத்து வருகின்றனர்.

ஆனையிறவு உப்பள விடயத்தில் அதன் தொழிலாளர்கள் உறுதியான போராட்டங்களை முன்னெடுத்து அரசாங்கத்தின் தனியார்மயப்படுத்தும் திட்டத்தை முறியடிக்க வேண்டும். தொழிலாளர்கள் ஒற்றுமையாகவும், உறுதியுடனும் இப்போராட்டத்தை முன்னெடுக்கின்ற அதேவேளையில், ஏனைய உப்பளங்களில் உள்ள சக தொழிலாளர்களின் ஆதரவையும், ஏனைய தொழிற்சங்கங்களின் ஆதரவையும் தமது போராட்டத்துக்குத் திரட்ட வேண்டும். அப்பொழுதுதான் அவர்களது போராட்டம் வெற்றி பெறும்.

# "புதிய குற்றவியல் சட்டமூலம் சந்தேக நபர்களின் அடிப்படை உரிமையை மீறுகின்றது"!

## இடதுசாரிக் கட்சிகள் கண்டனம்!!

இலங்கை அரசாங்கம் புதிதாகக் கொண்டுவர உத்தேசித்திருக்கும் திருத்தப்பட்ட குற்றவியல் சட்டம் சந்தேக நபர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளது என இடதுசாரிக் கட்சிகள் கூட்டாகத் தெரிவித்துள்ளன. அண்மையில் பொரளையில் அமைந்துள்ள டாக்டர் எம்.எம்.பெரேரா நிலையத்தில் நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவைகள் இதனைத் தெரிவித்துள்ளன.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய சோசலிச கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவருமான ராஜா கொல்லுரே, "கொண்டுவரப்படவுள்ள புதிய திருத்தப்பட்ட குற்றவியல் சட்டத்தின்படி, சந்தேக நபர் ஒருவர் பொலிசாரிடம் வாக்குமூலம் அளிக்கையில் அவரது சட்டத்தரணி அங்கு பிரசன்னமாக இருக்க முடியாது என நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்திருக்கிறார். இது சந்தேக நபர் ஒருவரின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும். சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசாரணைகளின் போது தனது சட்டத்தரணியைக் கலந்தாலோசிக்கும் உரிமை அவசியம் இருக்க வேண்டும். புதிய சட்டத்தில் அதை ஒழிப்பதை நாம் வன்மையாக எதிர்ப்பதுடன், எமது கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். நாம் மட்டுமல்ல, இந்த விடயத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் என்பனவும் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன" எனக் குறிப்பிட்டார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'தகவல் அறியும் சட்ட மூலம்' பற்றி கருத்துரைத்த கொல்லுரே, "தகவல் அறியும் சட்ட மூலத்தின்படி அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது நிதி வளங்களையும், தமது நடவடிக்கைகளையும் பற்றி பகிரங்கப்படுத்த வேண்டும். ஆனால் இதுவரை காலமும் அப்படிச் செய்ததில்லை. தமக்குக் கிடைக்கும் பெருந்தொகையான வெளிநாட்டு நிதி பற்றி அவை தெரிவிக்காததுடன், அந்த நிதியை மக்களின் தேவைகளுக்கு உரிய முறையில் பயன்படுத்துவதும் இல்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் என வலியுறுத்திக் கூறியுள்ளார்" எனத் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர், கொல்லுரேயின் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதுடன், அரசாங்கம் மருந்துகளின் விலை பற்றி சரியான கொள்கை ஒன்றைக் கடைப்பிடிக்காததினால், அவற்றின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன எனக் குறிப்பிட்டனர்.

அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டால் ஏழை நோயாளிகள் அதிக விலை கொடுத்து வெளியில் மருந்துகளை வாங்க வேண்டிய அவல நிலைக்கு உள்ளாகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் கிளைகளை நாடு முழுவதும் திறந்து, பொது மக்களுக்கு குறைந்த விலையில் மருந்துகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என வலியுறுத்திக் கூறினர்.

**-வீரசிங்கம்**

## ஜெயலலிதாவும், 'துக்ளக்' சோவும் மரணம்!

தமிழகத்தின் செல்வாக்குமிக்க முதலமைச்சராக பதவி வகித்தவரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளரும், முன்னாள் நடிகையுமான செல்வி ஜெயலலிதா ஜெயராம் இரண்டரை மாத வைத்திய சிகிச்சை பலனளிக்காததால் தமது 68 வயதில் மரணமடைந்துள்ளார். ஜெயலலிதா மரணமடைந்து இரண்டு நாட்களின் பின்னர் அவரது நெருங்கிய நண்பரும், சில சமயங்களில் அவரது ஆலோசகராகவும் செயற்பட்ட, பன்முக ஆளுமை கொண்ட பிரபல பத்திரகையாளர் 'துக்ளக்' சோ இராமசாமி அவர்களும் வைத்திய சிகிச்சை பலனளிக்காததால் மரணமடைந்துள்ளார். இவர்கள் இருவரினதும் ஆளுமை விட்டுச் சென்ற வெற்றிடம் இலேசில் நிரப்ப முடியாதது என்பதே பலரினதும் ஏகோபித்த அபிப்பிராயமாகும்.

# பிரதமர் ரணில் தற்காலிகமாக பதவி விலக வேண்டும்! தொழில்சார் வல்லுனர்கள் வேண்டுகோள்!!

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி வழங்கியதில் நடைபெற்ற பல நூறு கோடி ரூபா ஊழல் மோசடி விவகாரம் சம்பந்தமான விசாரணை முடிவடையும் வரை அதில் தொடர்புடையவராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகி இருக்க வேண்டுமென இலங்கையின் தொழில்சார் வல்லுனர்கள் (Professionals) குழு ஒன்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

அண்மையில் இந்த பிணைமுறி விவகாரம் குறித்து இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிக்கும் ஆணைக்குழுவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்த இந்தக் குழுவினர், பின்னர் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடாத்திய போதே இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

இந்தக் குழுவில் ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சரத் வீரசேகர, சிரேஸ்ட விரிவுரையாளர் ராஜா குணரத்ன, பிரபல நடிகை ஒசாடி ஹேவமதும, சட்டத்தரணி யஜித் தென்னக்கூன், நிதி ஆலோசகர் ஜிதேந்திர விஜேபுர, பொருளியலாளர் இந்திரஜித் அபொன்சோ அடங்கியிருந்தனர்.

றியர் அட்மிரல் வீரசேகர அங்கு ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

2015 பெப்ருவரி 27ஆம் திகதி மத்திய வங்கியின் முதலாவது பிணைமுறி நடைபெற்றபோது, மத்திய வங்கி தற்போதைய நிதியமைச்சர் ரவி கருணநாயக்கவிடம் இருக்கவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமே இருந்தது. எனவே இந்தப் பாரிய மோசடி பற்றிய விசாரணை முறையாக நடைபெறுவதற்கு வழிவிட்டு பிரதமர் பதவியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிமசிங்க ஒதுங்கியிருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டார்.

வீரசேகரவுடன் இணைந்து கருத்து வெளியிட்ட சிரேஸ்ட விரிவுரையாளர் குணரத்ன, 2015 ஜனவரி 08இல் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு எப்படி சிங்கப்பூர் பிரஜையான அர்ச்சுனா மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநராகக் கொண்டு வரப்பட்டார் என்ற வரலாற்றை விளக்கினார். அத்துடன் இந்தப் பாரிய நிதி மோசடியின் மூலம் எவ்வாறு நமது தேசியப் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது என்பதையும் எடுத்துரைத்தார். அத்துடன், அர்ச்சுனா மகேந்திரனின் பிணைமுறி விவகாரத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ள தொடர்பு சம்பந்தமான விவகாரத்தை முறையான விசாரணை ஒன்றே தெளிவுபடுத்தும் எனச் சுட்டிக்காட்டினார்.

பொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொருளியலாளர் இந்திரஜித் அபொன்சோ கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கம் பொதுமக்களின் நலன்களைப் பாதுகாக்கத் தவறியுள்ளது எனக் குற்றஞ்சாட்டினார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட றியர் அட்மிரல் வீரசேகர, இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிக்கும் ஆணைக்குழு பொதுமக்களின் வரிப்பணத்தில் செயல்படுகின்ற போதிலும், பொறுப்பற்ற தன்மையுடன் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டினார்.

தமது மகஜரைக் கையளிக்கச் சென்றபோது, அங்கு பிரதிப் பணிப்பாளர் உட்பட உயரதிகாரிகள் யாரும் பிரசன்னமாக இருக்கவில்லை எனவும், அதனால் தாம் வேறு வழியேதுமின்றி தமது மகஜரை அங்கிருந்த சாதாரண எழுதுவினைஞர் ஒருவரிடம் கையளித்துவிட்டு வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இதுபற்றித் தான் ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் ரி.பி.வீரசூரியவிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் கூறினார்.

# இவர்கள் சொல்வது உண்மையானால்...

இலங்கையின் வட பகுதியில் ஒன்றரை இலட்சம் இராணுவத்தை அரசாங்கம் நிறுத்தி வைத்திருப்பதாக வட மாகாண முதலாமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் அடிக்கடி கூறி வருகின்றனர். குறிப்பாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் தன்னைச் சந்திக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் தவறாமல் இதைக் கூறி வருகின்றார்.

இவர்கள் இருவரும் சொல்வது உண்மையானால், அது ஒரு பாரதூரமான விடயம். ஏனெனில் இவர்கள் இருவரினதும் கூற்றுப்படி, வடக்கில் வாழுகின்ற ஆறு இலட்சம் மக்களுக்கும் நான்கு பேருக்கு ஒரு இராணுவ வீரன் என்றாகிறது. அதாவது வடக்கில் வாழுகின்ற மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் என்று கருதியே அரசாங்கம் நால்வரைக் கண்காணிக்க ஒரு இராணுவ வீரன் எனக் கணக்கிட்டு நிறுத்தி வைத்திருக்கிறது என்று அர்த்தம்.

போர் முடிவுற்று ஒன்பது வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் அரசாங்கம் வடக்கு மக்களைச் சந்தேகிக்கிறது என்றால், தற்போதைய அரசாங்கம் நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போவதாகச் சொல்வது பொய்யா என்ற கேள்வி எழுகின்றது.

அதேநேரத்தில் வடக்கு முதலமைச்சரும், சுரேஸ் பிரேமச்சந்திரனும் சொல்வது உண்மைதானா என்று உறுதிப்படுத்துவதற்கு அவர்களிடமும் சில கேள்விகள் கேட்க வேண்டியுள்ளது.

முதலாவது கேள்வி: வடக்கில் நிலை கொண்டுள்ள இராணுவத்தின் தொகையை இவர்கள் எங்கிருந்து பெற்றார்கள்? சொந்தமாக இராணுவத்தினர் மத்தியில் கணக்கெடுப்பு ஏதும் நடாத்தினார்களா?

இரண்டாவது கேள்வி: வடக்கில் மட்டும் ஒன்றரை இலட்சம் இராணுவம் என்றால், முழு நாட்டிலும் இருக்கும் இராணுவத்தின் தொகை எவ்வளவு? பத்து இலட்சத்தைத் தாண்டுமா?

இந்த இரு கேள்விகளுக்கும் இந்த இரு கனவான்களும் பதில் சொல்லச் சிரமப்படக்கூடும். ஆனால் அவர்கள் ஒன்று செய்யலாம். இந்த இருவரும் அங்கம் வகிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர் மூலம் இந்த இரு கேள்விகளையும் நாடாளுமன்றத்தில் எழுப்பி உண்மை நிலையை வெளிக்கொணர முடியும்.

திரும்பத் திரும்ப ஒன்றரை இலட்சம் இராணுவம் பற்றி கிளிப்பிள்ளை போலச் சொல்வதை விடுத்து, இந்த வழியில் உருப்படியாகச் செயல்பட்டு தங்கள் கூற்றின் உண்மைத் தன்மையை நிரூபிப்பார்களா?

# Vote என்றால் என்ன தெரியுமா?

Vote *என்ற சொல்* voice of tax payers every where *என்ற சொற்களின் சுருக்கம். அந்தக் காலத்தில் வரி செலுத்துவோருக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை இருந்தது. பின்னாளில் அனைவருக்கும் வாக்குரிமை நடைமுறைக்கு வந்தபோதிலும்* vote *என்ற சொல்லே இன்னும் வழக்கத்தில் இருந்து வருகிறது.*

*நன்றி: கல்கி*

# பூசனிக்காயில் உலக சாதனை!

*பெல்ஜியம் நாட்டிலுள்ள ஒரு விவசாயி தனது பண்ணையில் 2,264.6 இறாத்தல் எடையுள்ள பூசனிக்காயை விளைவித்ததின் மூலம் உலக சாதனையொன்றை நிகழ்த்தியுள்ளார்!*

# சீனிக்கு பை!

*அளவுக்கு அதிகமான உடல் பருமனையும், நீரிழிவு போன்ற வியாதிகளையும் கட்டுப்படுத்துவதானால், இனிப்புக் கூடிய சோடா போன்ற பானங்களையும், உணவுப் பொருட்களையும் நுகர்வதைக் குறைக்குமாறு உலக சுகாதார நிறுவனம் 2016 ஒக்ரோபர் 11இல் விடுத்த அறிக்கை ஒன்றில் பொதுமக்களை அறிவுறுத்தி உள்ளது.*

# பெண்களே அதிக உழைப்பாளிகள்!

*யுனிசெஃப்* (Unicef) *வெளியிட்டுள்ள ஒரு தகவலின்படி, உலகம் முழுவதுமுள்ள 5 இலிருந்து 14 வயது வரையான பெண் பிள்ளைகள் தினசரி 550 மில்லியன் மணித்தியாலங்கள் வீட்டுப் பணிகளுக்காகச் செலவிடுகின்றனர். ஆனால் இதே வயதுள்ள ஆண் பையன்கள் 440 மில்லியன் மணித்தியாலங்களே இதே வேலைகளுக்காகச் செலவிடுகின்றனர்.*




# இணையத்தள இழப்பு!

*கடந்த வருடம் 19 நாடுகளில் இணையத்தளப் பாவனையில் சில பகுதிகள் தடை செய்யப்பட்டுள்ளன. இதன் பொருளாதாரப் பெறுமதி 2.4 பில்லியன்* (Billion) *டொலர்கள் என புறூக்கிங்ஸ் நிறுவனம்* (Brookings Institute) *தெரிவித்திருக்கிறது. உதாரணத்துக்கு சில நாடுகளின் இழப்புக்கள் டொலரில்:*

*இந்தியா – 968,080,702*

*சவூதி அரேபியா – 465,280,632*

*மொரக்கோ – 320,456,034*

*பிரேசில் - 116,038,230*

*பாகிஸ்தான் - 68,769,394*

*எத்தியோப்பியா – 8,539,355*

# ஒபாமாவின் சாதனை!

*ஓய்வு பெற்றுச் செல்லும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தன் பதவிக் காலத்தில் செய்த மாபெரும் சாதனை என்று சொல்வதானால், அது அமெரிக்கா கியூபாவுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்தியதும், அமெரிக்க ஜனாதிபதி என்ற வகையில் பல தசாப்தங்களாக எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதியும் செய்யாத வகையில் கியூபாவுக்கான விஜயத்தை மேற்கொண்டதுமாகும்.*

*ஓய்வு பெறுவதற்கு முதல் அவர் இன்னொன்றையும் செய்திருக்கிறார். அதாவது கியூபா சென்று வரும் ஒவ்வொரு அமெரிக்கரும் 100 டொலர்கள் பெறுமதியான கியூபாவின் பிரசித்தி பெற்ற ரம் என்ற குடிவகையையும், சுருட்டுகளையும் அமெரிக்காவுக்கு எடுத்து வர அனுமதி வழங்கியுள்ளார்.*

# போலந்து தந்த துணிவின் அடையாளம்!

Andrzej Waida *என்ற புகழ்பெற்ற போலந்து திரைப்பட நெறியாளர் தமது 90 ஆவது வயதில் அண்மையில் காலமானார். அவரது வாழ்நாள் சாதனைக்காக 2000 ஆம் ஆண்டில் அவரது* Katyn *என்ற திரைப்படத்துக்கு கௌரவ ஆஸ்கார் பரிசு வழங்கப்பட்டது. அவர், "துணிவின் அடையாளம்" என்றும், "போருக்குப் பிந்திய கோடிக்கணக்கான ஐரோப்பிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்" என்றும் புகழப்பட்டுள்ளார்.*

# நம்மைச் சுற்றி

*நமது பால்வெளியில் இருக்கும் நட்சத்திரங்களின் எண்ணிக்கை நாம் முன்னர் நினைத்திருந்ததை விடவும் 10 மடங்கு அதிகம் என சமீபத்தில் விண்வெளி விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கின்றனர்.*

# முன் வரிசையில் அமெரிக்க நிறுவனங்கள்!

*விண்வெளி ஆய்வில் முன்னணி வகிக்கும் நாடான அமெரிக்காவில், இந்தத் துறையில் 1,000 இற்கும் அதிகமான நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.*

# மனிதர்களின் வயதெல்லை…

Nature *(இயற்கை) என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள ஒரு ஆய்வறிக்கையின்படி, ஒவ்வொரு வருடமும் 115 வயது வரை வாழும் முதியவர்கள் உலகில் இருந்து வருகின்றனர். இருந்தபோதிலும், உடல் உயிரணுக்களின் தன்மையின்படி 125 வயதைத் தாண்டி மனிதர்கள் வாழ்வது சாத்தியமில்லை என அந்த அறிக்கை கூறுகின்றது.*

# இரத்தினங்களின் இரத்தினம்!

*மியன்மாரில் (பர்மா) 210 தொன் நிறையுடைய இரத்தினக்கல் ஒன்று அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்லின் உயரம் 14 அடியும், நீளம் 18 அடியுமாகும். இதன் பெறுமதி அண்ணளவாக 170 மில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கல்லை உடைத்து ஆபரணங்கள் செய்யவும், சிலைகள் வடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.*

# ஹிட்லரின் பிறந்த வீடும் அழிக்கப்பட்டது!

*ஜேர்மானிய சர்வாதிகாரி அடொல்ஃப் ஹிட்லர் பிறந்த ஆஸ்திரியாவிலுள்ள அவர் பிறந்த வீடு நவ நாஜிகளின் புனித தலமாக மாறுவதைத் தடுப்பதற்காக அந்நாட்டு அரசால் இடித்து தரைமட்டமாக்கப் பட்டுள்ளது. அந்த இடத்தில் கட்டப்படவுள்ள புதிய கட்டடம் அரசாங்க கரியாலயமாக அல்லது தொண்டு நிறுவன செயலகமாகப் பயன்படுத்தப்படவுள்ளது.*

# தாலாட்டுப் பாடல் வரிகள்!

*அத்தை அடிச்சாளோ*

*அரளிப் பூச்செண்டாலே*

*மாமன் அடிச்சாரோ*

*மல்லிகைப் பூச்செண்டாலே!*

# ஐ. நாவின் புதிய செயலாளர் நாயகம்!

*போர்த்துக்கல் நாட்டின் முன்னாள் பிரதமரான* Antonio Guterres *ஐக்கிய நாடுகள் சபையின் புதிய செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் முன்னர் அகதிகளுக்கான ஐ.நா ஆணையாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

# உலகின் வயது கூடிய பன்டா!

*உலகில் ஆக வயது கூடிய 38 வயது பன்டா* (Giant Panda) *எனப்படும் அரிய வகை விலங்கு சீனாவில் உயிருடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.*

# மிகையான இதயத்துடிப்பு

*சாதாரணமான இதயத்துடிப்பு 60-90 ஒரு நிமிடத்திற்கு இருக்கும் மற்றும் அது எப்போது அதிகரித்து 100 க்கு மேல் ஒரு நிமிடத்திற்கு அடிக்கிறதோ, அப்போது அது மிகையான இதயத்துடிப்பு என்று அறியப்படும். அத்தோடு உங்களுக்கு இதய நோய் அல்லது இதயத்தில் எந்த பிறழ்தல் இருந்தாலும், இதயத்தின் மின்சார அமைப்பு பாதிக்கப்படுகிறது. இது அசாதாரண தூண்டுதல் மற்றும் இதயத்துடிப்பை ஏற்படுத்துகிறது. எனினும், நீங்கள் மிகையான இதய துடிப்பால் பாதிக்கப்படலாம். அது இதயக் கட்டமைப்பின், வால்வு தொடர்புடைய பிரச்சினைகளுக்கு, தமனிகள் அடைப்பு / தடை அல்லது இதய தசைகளுக்கு சேதம் விளைவிக்காமல் இருக்கும் போது, இதயத்தின் மின் சமிக்ஞைகளின் அசாதாரண தொழிற்பாட்டின் மூலம் வெளியே தள்ளும்.*

*1. தன்னியக்கம்*

*இதயத்துடிப்பு என்பது வேறொன்றுமல்ல. அது மின் தூண்டுதல்கள் மூலம் இதயத்தை உந்தி தள்ளி கட்டுபடுத்துவது தான். எனவே ஒவ்வொரு முறையும் இதயம் உந்தித் தள்ளும் போதும் உங்கள் இதயம் துடிக்கிறது. இந்த மின் சமிக்ஞைகள் மேலறையிலிருந்து கீழறைக்கு ஒரு நிச்சயமான தடத்தில் கடக்கின்றன இவை ஏவீ முனைகள் என்று அறியப்படுகின்றன. சாதாரணமான இதய் துடிப்பு 60-90 ஒரு நிமிடத்திற்கு இருந்தாலும், நீங்கள் கடினமான பயிற்சி செய்யும் போது, அது 120 / 130 ஆக ஒரு நிமிடத்திற்கு அதிகரிக்கலாம். இது கவலைக்கிடமானது அல்ல. எனினும் சிலவற்றில், மேல் மற்றும் கீழறைகளின் தசைகள் இயற்கைக்கு மீறிய சுறுசுறுப்புடன் எந்த தெரிந்த காரணமும் இன்றி துடிக்கின்றன (இடியோபதி). எனவே அதிக சுறுசுறுப்பு மேலறையில் ஆர்டியல் மிகை இதய துடிப்புக்கும் மற்றும் கீழறையில் அது வெண்டிரிகுலர் மிகை இதய துடிப்புக்கும் வழி வகுக்கிறது. எதுவாக இருந்தாலும், அசாதாரண இதய துடிப்பு ஒரு நிமிடத்திற்கு 140 அடைகிறது. இங்கே நீங்கள் துடித்தல் அல்லது ஒழுங்கற்ற இதயத் துடிப்பு பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய எல்லாம் உள்ளன.*

*2. அசாதாரண நிலைமைகள்*

*இரண்டாவது பொதுவான காரணம் அசாதாரண நிலைமைகளில் ஒரு தடத்தை பின்பற்றுவதற்கு பதில், மின் தூண்டுதல்கள் 2 அல்லது 3 வழி தடங்களை தூண்டுதல் நடத்த எடுத்துக் கொள்வது தான். இது பொதுவாக பிறப்பிலிருந்தே அல்லது வயதுடன் பார்க்க முடியும். எனவே மின் தூண்டிகள் கீழ் அறைக்கு ஒரு வழி மூலம் பயணம் செய்து மேல் அறை வரை இன்னொரு வழி மூலம் பயணம் சென்றடைவது, மிகையான இதய துடிப்புக்கு வழி வகுக்கும்.*


*3. தூண்டப்பட்ட நடவடிக்கை.*

*இது தன்னியக்கத்தை ஒத்தது, ஆனால் ஒரேயொரு வித்தியாசம் என்னவென்றால், இதய துடிப்பு ஒரு வெளி காரணியால் தூண்டப்படலாம். அதற்கு மருந்துகள் அல்லது வைரஸ் தொற்று காரணமாக இருக்கலாம், இது அதிகப்படியான அல்லது அதிகரித்த இதய துடிப்பை ஏற்படுத்துகிறது. சில சூழ்நிலைகள் மிகையான இதய துடிப்புக்கு வழிவகுக்கின்றன, இவைகளுக்கான அடிப்படையான காரணங்களை கையாள்வதின் மூலம் சிகிச்சை அளிக்கலாம். இதில் இரத்தசோகை, இரத்தப்போக்கு, காய்ச்சல், காய் அல்லது வலி, தொற்று மற்றும் தைரோடாக்சிகோசிஸ் (அதிதைராய்டியம்). ஆகியவை அடங்கும். தைரோடாக்சிகோசிஸில், மின் தூண்டல்கள் சைனஸ் முனையில் நின்று விட்டால், இவை பிராந்தியத்தில் அதிக செயல்பாட்டை ஏற்படுத்துகின்றன. இது சைனஸ் மிகையான இதய துடிப்பு என்று அறியப்படும், இதில் இதய துடிப்பு 130-140 ஒரு நிமிடத்திற்கு துடிக்கும்.*

***- டாக்டர் சந்தோஷ் டோரா, ஏஷியன் ஹார்ட் இன்ஸ்டிடியூட், மும்பை***

**2016 நொவம்பர் 25 அன்று தமது 90ஆவது வயதில் காலமான கியூப மக்களின் மாபெரும் தலைவர் தோழர் ஃபிடல் காஸ்ட்ரோ நினைவாக இக்கட்டுரை இடம் பெறுகிறது.**

# எக்காலத்திலும் அழிக்க முடியாத தோழர் ஃபிடல் காஸ்ட்ரோவின் வரலாற்றுப் பங்களிப்பு!



**தோ**ழர் ஃபிடல் காஸ்ட்ரோவின் தந்தையார் ஸ்பெயின் நாட்டிலிருந்து வந்து கியூபாவில் குடியேறிய கரும்புத் தோட்ட முதலாளியான Angel Castro Y Argiz என்பவர் ஆவார். தாயார் பெயர் Lina Ruz Gonzalez ஆகும். காஸ்ட்ரோவுடன் சேர்த்து உடன் பிறந்த சகோதரர்கள் 7 பேராகும்.

இவரது தந்தையார் 6 வயதான கஸ்ட்ரோவையும் சகோதரர்களையும் சந்தியாகோ டி கியூபாவில் வசித்த தனது ஆசிரிய நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கிப் படிப்பதற்கு ஏற்பாடு செய்தார். பின்னர் 1945இல் தலைநகர் ஹவானாவில் உள்ள மிகச் சிறந்த கல்லூரிக்கு காஸ்ட்ரோ மாற்றப்பட்டார். அங்கிருந்தே சட்டம் படிப்பதற்காக ஹவானா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கொண்டார்.

ஏழைமக்கள் மற்றும் தொழிலாளர் பால் காஸ்ட்ரோவின் அக்கறையும், புரட்சிகரமான சமூக சிந்தனையும் 13 வயதிலேயே அவருக்கு ஏற்பட்டுவிட்டன. அவரது 13 வயதில் தனது தந்தையாரின் கரும்புத் தோட்டத்தில் வேலை செய்த தொழிலாளர்கள் நடாத்திய போராட்டத்திற்கு அவர் துணை நின்றமை இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. பின்னர் 1945இல் ஹவானா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாணவர் போராட்டங்களில் முன்னணியில் நின்று செயற்பட்டார்.

## தவம்

அவ்வாறு மாணவர் போராட்டங்களில் ஈடுபட்ட வேளையில் அவர் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக மாறியதுடன், கரீபியன் தீவுகளில் அமெரிக்காவின் தலையீடுகளையும் எதிர்த்தார். அத்துடன் 1947இல் Party of the Cuban People என்ற கட்சியுடனும் தன்னை இணைத்துக் கொண்டார்.

1949இல் காஸ்ட்ரோவுக்கு திருமணம் நடந்தது. அதன் பயனாக அவருக்கு ஒரு மகன் பிறந்தார்.

அவரது செயல்பாடுகள் தொடர்ந்து கொண்டிருந்ததால் அவரின் உயிருக்கு எப்போதும் ஆபத்து இருந்து கொண்டே இருந்தது. அதன் காரணமாக அவர் சிறிது காலம் உள்ளூரிலும், அமெரிக்காவிலும் தலைமறைவாக வாழ வேண்டி ஏற்பட்டது. பின்னர் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்து தனது பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்து 1950இல் சட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்றார்.

1952இல் The Movement என்ற தலைமறைவு இயக்கத்தை உருவாக்கினார்.

யூலை 26 – 1953 என்ற இயக்கத்தால் Moncada Barrack என்ற இராணுவத்தளம் தாக்கப்பட்டது. அது தோல்வியில் முடிவடைந்ததால் பல புரட்சியாளர்கள் கொல்லப்பட்டதுடன், காஸ்ட்ரோவும் வேறு சில தோழர்களும் சர்வாதிகாரி பற்றிஸ்ரா (Batista) தலைமையிலான இராணுவ ஆட்சியிடமிருந்து தமது உயிரைப் பாதுகாப்பதற்காக பல மைல்கள் பிரயாணம் செய்து Sierra Maestra என்ற மலைப்பகுதிக்குச் சென்றார்கள்.

அந்த மலைப்பகுதியில் தமது முதலாவது கெரில்லாத் தளத்தை நிறுவ முயன்றனர். ஆனால் இராணுவம் சுற்றி வளைத்ததால், பலர் கொல்லப்பட்டு காஸ்டரோவும் வேறு சில தோழர்களும் கைது செய்யப்பட்டு, காஸ்ட்ரோவுக்கு 15 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அந்த வழக்கின் போது அவர் நிகழ்த்திய உரைதான் பின்னர் "வரலாறு என்னை விடுதலை செய்யும்" என்ற தலைப்பில் புகழ்பெற்ற உரையாகும்.

காஸ்ட்ரோவை விடுதலை செய்யுமாறு அவரது தோழர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வந்தனர். இந்த நிலையில் தனக்கு அமெரிக்காவின் அதரவும், பல்தேசிய கொம்பனிகளினதும் ஆதரவு இருப்பதால் காஸ்ட்ரோ போன்றவர்களால் தன்னை எதுவும்

செய்துவிட முடியாது என்று கருதிய பற்றிஸ்ரா 1955 மே 15ஆம் திகதி அவரை விடுதலை செய்தார்.

1948இல் நடந்த தேர்தலில் காஸ்ட்ரோவின் கட்சி போட்டியிட்டு மூன்றாவது நிலைக்கு வந்தாலும், அவர்களது பிரச்சாரம் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அன்றைய கியூப அரசு மக்கள் எழுச்சியை அடக்க வன்முறைக் கும்பல்களின் உதவியை நாடியதால் காஸ்ட்ரோ போன்ற போராளிகள் தங்களைக் காப்பாற்றுவதற்கு ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

1947இல் டொமினிக்கன் குடியரசை ஆட்சி செய்த வலதுசாரி இராணுவக் குழுவுக்கு எதிரான போராட்டங்களிலும், 1948இல் கொலம்பியாவில் ஏற்பட்ட புரட்சிகர எழுச்சியிலும் காஸ்ட்ரோ பங்குபற்றினார். ஆனால் அப்போராட்டங்கள் தோல்வியில் முடிந்தன.

அதன் பின்னர் காஸ்ட்ரோ, MR – 26 – 7 என்ற பெயரிடப்பட்ட யூலை எழுச்சியை முன்கொண்டு செல்வதற்காக 11 பேர் கொண்ட மிக இறுக்கமான தேசிய நிர்வாக சபை என்ற அமைப்பை உருவாக்கினார். நாட்டில் அந்த நேரத்தில் நிலவிய அரசியல் குழப்பங்களாலும், மக்கள் போராட்டங்களினாலும் இராணுவ சர்வாதிகார அரசு காஸ்ட்ரோவையும் ஏனைய தோழர்களையும் கைது செய்யக்கூடிய நிலை ஏற்பட்டதால், அதிலிருந்து தப்புவதற்காக நாட்டை விட்டு வெளியேறி மெக்சிக்கோவுக்குப் பயணமானார்கள்.

அப்பொழுது காஸ்ட்ரோ பத்திரிகைகளுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறினார்:

"நான் கியூபாவை விட்டு வெளியேறுகின்றேன். ஏனெனில் சமாதான வழியிலான எமது எதிர்ப்பை வெளியிடுவதற்கான பாதைகள் மூடப்பட்டுவிட்டன. நான் நினைக்கிறேன் எமது மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான காலம் நெருங்கிவிட்டது. நாங்கள் எவரையும் மண்டியிடத் தயாரில்லை. அதற்குப் பதிலாக போராட்டத்தை முன்கொண்டு செல்வோம்."

மெக்சிக்கோவில்தான் காஸ்ட்ரோ முதன்முதலாக ஆர்ஜன்ரீனாவைச் சேர்ந்த டாக்டரும், மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்டுமான எர்னெஸ்ரோ சே குவேராவைச் சந்தித்து தோழமை பூண்டார். அப்போது சே அங்குள்ள பத்திரிகை ஒன்றிற்கு நிருபராக வேலை செய்து கொண்டிருந்தார். முதல் சந்திப்பிலேயே சே தன்னைவிட மிக முன்னேறிய புரட்சியாளர் என்பதை காஸ்ட்ரோ புரிந்து கொண்டார். அதேவேளை அமெரிக்காவுக்குச் சென்று புரட்சிக்கு சாதகமான பொருளாதார வளமுள்ள நண்பர்களின் உதவிகளையும் பெற முயற்சித்தார்.

1956 நொவம்பர் 25இல் காஸ்ட்ரோவும் 81 ஆயுதம் தாங்கிய புரட்சியாளர்களும் மெக்சிக்கோவிலிருந்து Granma என்ற கப்பலில் 7 நாட்களாக 1,200 மைல் பயணம் செய்து கியூபாவைச் சென்றடைந்தனர். ஆனால் பற்றிஸ்ராவின் படைகளால் பலர் சிறை பிடிக்கப்பட்டு 19 பேர் மட்டுமே தப்பி Sierra Maestra என்ற மலைப்பகுதியைச் சென்றடைந்தார்கள்.

அங்கிருந்து சிறு சிறு கெரில்லாத் தாக்குதல்களை நடாத்தி எதிரிப்படைகளிடமிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொண்டு, காயமடைந்த எதிரிப்படையினருக்கு முதலுதவி சிகிச்சையும் அளித்துக் கொண்டு முன்னேறினார்கள். இதனால் படிப்படியாக எதிரிப்படை வீரர்களும், உள்ளூர் மக்களும் இவர்களுடன் இணைந்து கொண்டனர். இவர்களது கெரில்லாப் படையினரின் எண்ணிக்கை 200 பேராக வளர்ச்சி அடைந்தது. மக்களுக்கும் இவர்கள் மேல் நம்பிக்கை வந்தது.

1957 யூலையில் காஸ்ட்ரோ தமது படை அணிகளை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒன்றுக்குத் தானும், இன்னொன்றுக்கு சேயும், மற்றொன்றுக்கு தனது சகோதரர் ராவுலும் தலைமை தாங்கினார்கள். இதேவேளை கியூபாவின் நகர்புறங்களில் இருந்த MR – 26 – 7 இன் அங்கத்தவர்கள் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்ததுடன், காஸ்ட்ரோ குழுவினருக்குத் தேவையான உதவிகளையும் வழங்கினார்கள்.

இராணுவ சர்வாதிகாரி பற்றிஸ்ராவுக்கு எதிரான மக்களின் உணர்வுகளும் உச்ச நிலையை அடைந்தது. எதிர்க் கட்சிகளும் வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தன. இந்தச் சூழ்நிலையில் பற்றிஸ்ராவுக்கு வழங்கி வந்த உதவியை அமெரிக்காவும் நிறுத்தியது.

ஆயுதப் போராட்டமும், மக்கள் போராட்டமும் இணைந்து முன்னேறுவதைக் கண்டு அச்சமடைந்த சர்வாதிகாரி பற்றிஸ்ரா தனது 10,000 பேர் கொண்ட ஆயுதப் படையினரைக் கொண்டு Sierra Maestra பிரதேசத்தைச் சுற்றி வளைத்தான். ஆனால் காஸ்ட்ரோ தலைமையிலான கெரில்லா இராணுவ தந்திரோபாயத்துக்கு முன்னால் அப்பெரிய படை தோல்வி கண்டதுடன், எதிரிப் படையில் இருந்த பலரும் ஆயுதங்களுடன் புரட்சியாளர்களுடன் இணைந்து கொண்டனர். இதனால் சர்வாதிகாரி பற்றிஸ்ரா 300 மில்லியன் டொலர் பணத்துடன் நாட்டை விட்டுத் தப்பி ஓடினான். அதன்பின் நாட்டின் அரசியல் நிலைமைகளில் வேகமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அவை வருமாறு:

- 1959 ஜனவரி 1இல் சர்வாதிகாரி பற்றிஸ்ரா நாட்டை விட்டுத் தப்பியோடிய நிலையில் புரட்சிப்படை ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.
- 1960 யூனில் கியூபா அமெரிக்கர்களுக்கு சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களைத் தேசியமயமாக்கியது. அதைத் தொடர்ந்து ஒக்ரோபரில் அமெரிக்கர்களுக்கு சொந்தமான எல்லா வர்த்தக நிலையங்களையும் தேசியமயமாக்கினர்.
- 1960 ஒக்ரோபரில் அமெரிக்கா உணவையும் மருந்தையும் தவிர ஏனைய எல்லா ஏற்றுமதிப்

பொருட்களையும் கியூபாவுக்கு தடை செய்துவிட்டது.

- 1961 ஏப்ரல் 16ஆம் திகதி கியூபாவை ஒரு சோசலிச நாடு என காஸ்ட்ரோ பிரகடனம் செய்தார்.
- 1961 ஏப்ரல் 17இல் அமெரிக்க சீ.ஐ.ஏ. உளவு நிறுவனத்தால் பயிற்றுவிக்கப்பட்ட கியூப கைக்கூலிகளின் படையெடுப்பை கியூபா முறியடித்தது. இந்தப் போரில் காஸ்ட்ரோ நேரடியாகத் தலைமைதாங்கிப் போரிட்டார்.
- 1962 பெப்ருவரி 07இல் அமெரிக்கா கியூபாவுக்கான சகல ஏற்றுமதிகளையும் தடை செய்தது.
- 1962 ஒக்ரோபரில் கியூபா மீது படையெடுப்பதில்லை என்ற அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப் கெனடியின் வாக்குறுதி காரணமாக சோவியத் ஏவுகணைகள் கியூபாவிலிருந்து அகற்றப்பட்டன. சோவியத் ஏவுகணைகள் கியூபாவிலிருந்து அகற்றப்பட்டன.
- 1968இல் கியூப அரசு சகல தனியார் வியாபாரங்களையும் அரசுடமையாக்கியது.
- உலகிலேயே மிகச் சிறந்த சுகாதார சேவையை கியூபா உருவாக்கியுள்ளது. அந்நாட்டில் 94 சதவீதம் பேர் கல்வியறிவு உள்ளவர்களாக உள்ளனர்.
- 10 அமெரிக்க ஜனாதிபதிகளின் ஆட்சிக் காலத்தில் கியூபாவுக்கு ஏற்படுத்தப்பட்ட சகல தடைகளையும் முறியடித்து, தனக்கு எதிராக சீ.ஐ.ஏவால் மேற்கொள்ளப்பட்ட 600 இற்கும் அதிகமான கொலை முயற்சிகளையும் தாண்டி, கியூபாவை மனிதகுலத்தின் முன்னுதாரணம் மிக்க நாடாக மாற்றிவிட்டு, 90 வயதுவரை நிற வாழ்க்கை வாழ்ந்து தோழர் காஸ்ட்ரோ இயற்கை மரணம் அடைந்துள்ளார். அவரது அடிச்சுவட்டை கியூப மக்கள் தொடர்வார்கள் என்பதுதான் உலக மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# பிரபாகரனை காப்பாற்ற அமெரிக்காவும், நோர்வேயும் எடுத்த முயற்சிகளை தமிழகத் தலைவர்கள் விரும்பவில்லை!

## முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் தகவல்!!

இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார செயலாளராக இருந்த சிவ்சங்கர் மேனன் தனது அனுபவங்களை CHOICES Inside the making of India's Foreign Policy என்ற பெயரிலான புத்தகமாக எழுதி வெளியிட்டுள்ளார். அந்தப் புத்தகத்தில் இலங்கையில் அரசுக்கும் புலிகளுக்கும் நடந்த இறுதிக்கட்டப் போரின்போது புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் காப்பாற்றுவதற்கு அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகள் முயற்சி எடுத்த போது அதை இந்தியா தடுத்ததாகவும், இந்திய அரசின் அந்த நிலைப்பாட்டை தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் ஆதரித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், இந்த விவகாரத்தில் தி.முக., அ.தி.முக. கட்சிகளின் நிலைப்பாடு வெளிப் பார்வைக்கு மத்திய அரசுடன் முரண்படுவது போலத் தோன்றினாலும், அடிப்படையில் அவை இரண்டும் மத்திய அரசின் நிலைப்பாட்டிலேயே இருந்தன என்றும் கூறியுள்ளார். அதற்குக் காரணம், தமிழகத் தலைவர்களை அழித்தாலே தமிழீழத்தை அடைய முடியும் என பிரபாகரன் எண்ணியிருந்தார் என்பதை தமிழகக் கட்சிகள் இரண்டும் அறிந்திருந்தன. அதன் அடிப்படையிலேயே இலங்கை தமிழ்த் தலைவர்களையும் பிரபாகரன் அழித்தார் என்பதையும் புரிந்திருந்தன என மேனன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது இறந்தவர்கள் பற்றி சிவ்சங்கர் மேனன் குறிப்பிடுகையில், போர் ஆரம்பித்த 1983 முதல் போர் முடிவுற்ற 2009 வரை 80,000 முதல் 100,000 பேர் வரை இறந்துள்ளதாகவும், இதில் பொதுமக்கள் 30,000 முதல் 50,000 வரை என்றும், புலிகள் 27,693 எனவும், இராணுவம் 23,790 எனவும், இந்திய அமைதிப்படை வீரர்கள் 1,155 எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிவசங்கர் மேனனின் இந்தக் கணக்கு இறுதிக் கட்டப் போரில் ஒன்றரை இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்ற புலி ஆதரவாளர்களின் கணக்கையும், இறுதிப் போரில் மட்டும் நாற்பதினாயிரம் பேர் வரை இறந்தனர் என்ற ஐ.நாவின் கணிப்பையும் மறுதலிப்பதாக உள்ளது. எது எப்படி இருப்பினும் ஆரம்பம் முதல் இறுதிவரை இந்தியா இலங்கையின் உள்நாட்டுப் போரில் முக்கிய பங்கு வகித்த நாடு என்ற வகையிலும், மேனன் இலங்கை – இந்திய உறவுகளில் முக்கிய பங்கு வகித்தவர் என்ற வகையிலும், அவரது கருத்துகள் புறந்தள்ள முடியாதவை என்பதே அரசியல் நோக்கர்களின் அபிப்பிராயமாக உள்ளது.

**எனது புரட்சியை 82 ஆதரவாளர்களோடு தொடங்கினேன். இப்போது மீண்டும் புரட்சியை தொடங்க வேண்டும் என்றால் 10 அல்லது 15 ஆதரவாளர்களுடன் தன்னம்பிக்கையை துணையாகக் கொண்டு ஆரம்பிப்பேன். ஏனெனில் உங்கள் இலக்குக்கான எதிர்கால திட்டம் வகுக்கப்பட்டிருந்தால், நம்பிக்கை இருந்தால் சிறு படைகூட புரட்சிக்கு வித்திடும்.**

---

**உலகத்தில் எந்த மூலையிலும், சுரண்டப்படுபவர்கள் நமது தேசாபிமானிகளே, சுரண்டுபவர்கள் நமது எதிரிகள்... உண்மையில் உலகமே நமது நாடு, உலகம் முழுவதும் உள்ள புரட்சியாளர்கள் நமது சகோதரர்கள்.**

**- ஃபிடல் காஸ்ட்ரோ**

# நீரிழிவு வியாதிக்கு புது வகையான விளக்கமும் தீர்வும்!

**நீரிழிவு வியாதிக்கு போதியளவு இன்சுலின் சுரக்காமையே காரணம் என எமக்கு கூறப்பட்டு வருகிறது. அத்துடன் அதைக் கட்டுப்படுத்துவதற்கு சரியான உணவுக் கட்டுப்பாடு, போதிய உடற்பயிற்சி என்பன அவசியம் என்றும் கூறப்படுகிறது. அத்துடன் நீரிழிவு நோய் உள்ளவர்கள் ஒருபோதும் உண்ணா நோன்பு இருக்கக்கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகிறது.**

**இவையெல்லாவற்றையும் சென்னையிலுள்ள டாக்டர் விஜயராகவன் என்பவர் மறுப்பதுடன், இந்த நோய்க்கான காரணம், அதற்கான சிகிச்சை முறை என்பனவற்றை மாறுபட்ட கோணத்திலும் தருகின்றார்.**

**அவரிடம் சிகிச்சை பெற்ற சுஜாதா தேசிகன் என்பவர் தமது அனுபவங்களையிட்டு 'கல்கி' வார இதழில் எழுதிய கட்டுரையை எமது வாசகர்களுக்காக கீழே தந்துள்ளோம்.**

இரண்டு வருசம் முன் வேலை நிமித்தமாக, சென்னைக்கு வந்தவுடன் தொண்டை கட்டிக்கொண்டு ஜூரம் வந்தது. தி.நகரில் பதினைந்து வருசத்துக்கு முன் எனக்குப் பழக்கப்பட்ட டாக்டர் விஜயராகவனிடம் சென்றேன். கிளினிக் பெரிதாக மாறவில்லை. காத்துக்கொண்டு இருந்தபோது, பலகையில் இரண்டு வரி எழுதியிருந்ததைப் படித்து ஆச்சரியப்பட்டேன்.

'Sulphonylurea போன்ற டயபட்டீஸ் மருந்துகளைக் கொண்டுவரும் ரெப்களுக்கு இங்கே அனுமதி இல்லை.' அடுத்த வரி இன்னும் ஆச்சர்யத்தைக் கொடுத்தது. "உங்களுக்கு டயபட்டீஸ் இருக்கா, அதை ரிவர்ஸ் செய்யலாம்!"

டாக்டரிடம் விசாரித்தேன். "ஞாயிற்றுக்கிழமை இதைப்பற்றிப் பேசுவேன். வந்து கேளுங்களேன்" என்றார்.

ஞாயிறு அவர் பேச்சைக் கேட்டபோது தெளிவு பிறந்தது. வாழ்நாள் முழுக்க மாத்திரை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கூற்றை முழுவதும் நிராகரித்தார். மேலும் – தினமும் காலை பிரட் சாப்பிடுங்கள், இரவு சப்பாத்தி சாப்பிடுங்கள், நிறையப் பழங்கள் எடுத்துக்கோங்க, வாகிங் போங்க, தினமும் ஆறு வேளை சாப்பிடுங்கள் போன்ற எல்லாவற்றையும் நிராகரித்தார்.

அவருடைய இரண்டு மணி நேரப் பேச்சின் சராம்சம் இதுதான். "மனிதன் நூறு வயது




வாழப் பிறந்தவன். டயபட்டீஸ், இரத்த அழுத்தம், தைராய்ட் போன்றவை மாறிவரும் வாழ்க்கை முறையால் நம் உடல் நமக்குச் சொல்லும் எச்சரிக்கை சமிக்ஞைகள். டைப் – 2 டயபடீஸ் போதுமான அளவு இன்சுலினைச் சுரப்பதில்லை என்ற தப்பான ஆலோசனையின் பேரில் மாத்திரைகள் கொடுக்கிறார்கள். இது முழுவதும் தப்பு. அதிக இன்சுலின்தான் பிரச்னையே!

மது குடித்துப் பழகியவர்களுக்கு குடிக்கவில்லை என்றால் உடல் நடுங்கும். அதைப் போக்க அவனைக் குடி என்று சொன்னால் எவ்வளவு முட்டாள்தனமோ அதே மாதிரி தான் நீரிழிவுக் குறைபாடு உள்ள ஒருவருக்கு மாத்திரை கொடுப்பதும். இதற்குப் பெயர் 'இன்சுலின் ரெசிஸ்டன்ஸ்'. 'இன்சுலின் ரெசிஸ்டன்ஸ்'சுக்கு வில்லனே சர்க்கரை மற்றும் கார்ப்ஸ் – காரணத்தை அறிந்து அதன் மூல காரணத்தைக் களைய வேண்டும்.

சுலபமாகப் புரிய வேண்டும் என்றால், உங்களுக்கு டைபாய்ட் காய்ச்சல் வந்தால் ஜூரம் வரும். இதற்கு சாதாரண பாராசிட்டமால் மாத்திரை எடுத்துக் கொண்டால் தற்காலிகமாக ஜூரம் சரியாகும். ஆனால் டைபாய்ட் குணமாகாது. அதற்கு நோய் எதிர்ப்பு மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆக மூல காரணமான அந்தக் கிருமிகளைத்தான் அழிக்க வேண்டும். அதேபோல்தான் சர்க்கரை வியாதிக்கு மூல காரணம் இன்சுலின் ரெசிஸ்டன்ஸ். அதை சரி செய்ய வேண்டும். இதற்கு ஒரே வழி மாவுச்சத்து என்னும் 'கார்ப்' குறைத்துக்கொண்டு நிறையக் கொழுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். இதை LCHF (Low Carb High Fat) என்பார்கள். கூடவே அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்தால் உங்கள் டயபட்டீஸூக்கு குட்பை.

உண்ணாவிரதமா? என்று அதிர்ச்சி அடைய வேண்டாம். உண்ணாவிரதம் இருந்தால் நம் உடலுக்கு நல்லது. அப்போதுான் நம் உடலில் இருக்கும் கொழுப்பை சீக்கிரமாக எரிக்க முடியும். நம் உடல் இத்தனை நாள் பெட்ரோல் என்ஜின் மாதிரி மாவுச்சத்தில் இயங்கிக் கொண்டு இருக்க, அதை டீசல் என்ஜின் மாதிரி கொழுப்பில் இயங்க வைக்க வேண்டும்.

ஏன் மாவுச்சத்து குறைவாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறேன்? நம் உடலில் சர்க்கரை, மாவுச்சத்து, புரோட்டின் இவை எல்லாம் உள்ளே சென்ற பிறகு குளுகோஸாக மாறி இரத்தத்தில் கலக்கிறது. இரத்தத்தில் அதிகம் சர்க்கரை இருந்தால் உடனே இன்சுலின் சுரக்கிறது. ஆனால் சுரக்கும் இன்சுலின் வேலை செய்ய முடிவதில்லை. எப்படி கூட்டமான பஸ்சில் நாம் உள்ளே நுழைய முடியாமல் இருக்கும் போது நம்மைப் பிடித்து உள்ளே தள்ளுவார்களோ அதே போல மாத்திரை சாப்பிடும் போது ஏற்படுகிறது. இன்சுலின் என்பது ஒரு ஹார்மோன். அதைச் செயற்கையாக சுரக்க வைப்பதால் பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. அதனால்தான் நீரிழிவு நோய் வந்தால் உடல் உறுப்புகள் ரிப்பேர் ஆகின்றன.

தீர்வு — அதிக இன்சுலின் சுரக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு அதிகம் சர்க்கரை, மாவுச்சத்து உங்கள் உணவிலிருந்து நீக்க வேண்டும். குளுக்கோஸ் உற்பத்தியாகும் உணவுகளான கார்ப் வகை உணவுகளையும் (அரிசி, கோதுமை), பழங்களையும் நீங்கள் தவிர்க்க வேண்டும். கூடவே அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்தால் நீங்கள் டயபிட்டீஸ் இல்லாமல் உயிர் வாழலாம்."

இட்லி, தோசை இல்லாமல் எப்படி வாழலாம்? இதனால் என்ன பாதிப்புகள்?

"இரண்டு ஆண்டுகளாக இட்லி, தோசை மட்டுமில்லை, மாத்திரைகூட இல்லாமல் வாழ்ந்துகொண்டு இருக்கிறேன். மேலும் என்னுடைய கிளைக்கோசிலாக்கப்பட்ட ஈமோகுளோபின் எனப்படும் HbA1c6 கீழ் வந்துவிட்டது. உடல் எடை ஒன்பது கிலோ குறைந்து 'பாடி மாஸ் இண்டக்ஸ்' 'பிஎம்ஐ' நான் ஆரோக்கியமாக இருப்பதாகச் சொல்லுகிறது. என் இடுப்பளவு நான்கு இன்ச் குறைந்து நல்ல தூக்கம், மூட் ஸ்விங்ஸ் எதுவும் இல்லாமல் எனர்ஜி லெவல் அதிகமாகி, பத்து வயது குறைந்த மாதிரி ஆகிவிட்டது. பயப்பட வேண்டாம், உயரம் குறையவில்லை!

நம் உடலுக்கு சக்தி இரண்டு முறைகளில்

கிடைக்கிறது — காா்பிலிருந்து கிடைப்பது கிளைகோஜன். இன்னொன்று கொழுப்பிலிருந்து கிடைக்கும் கீடோன் என்பது. கிளைகோஜன் கேஸ் மாதிரி கப் என்று கிடைக்கும் சக்தி. ஆனால் கீடோன் கரி அடுப்பு மாதிரி நின்று நிதானமாக எரியும்.

நம் உடலை எப்படி இதற்கு மாற்றுவது என்று குழம்ப வேண்டாம். நம் உடல் மிக இன்டலிஜென்ட்! அதிகம் காா்ப் கொடுக்காமல் அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்தால் நம் உடல் ஆட்டோமெட்டிக்காக கொழுப்பை எரிக்க ஆரம்பிக்கும்.

இரண்டு வருசம் முன் இதை எல்லாம் டாக்டர் விளக்கிய பிறகு, நேராக ஸ்ரீரங்கம் சென்று நம் பெருமாளைச் சேவித்துவிட்டு மாத்திரையை (டாக்டர் அறிவுரையுடன்) நிறுத்தினேன். இன்று எனக்கு டயபிட்டீஸ் இல்லை என்று பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

**பிகு: மேலே குறிப்பிட்ட முறை டைப் – 2 டயபடீஸ் உள்ளவர்களுக்கு மட்டுமே. நீங்கள் இதை உங்கள் டாக்டரை ஆலோசித்துப் பின்பற்றுங்கள்.**

முன்பக்கத் தொடர்ச்சி…

*தீர்வில் அவர்களது நிலைப்பாடு என்ன என்பது குழப்பமாகவே இருக்கிறது. இந்த இடத்தில் வரலாற்றைக் கொஞ்சம் திரும்பிப் பார்ப்பது அவசியம்.*

*சுதந்திர இலங்கையில் தமிழர்களின் முதலாவது அரசியல் கட்சியான ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை எடுத்து நோக்கினால், அது இனப் பிரச்சினைக்கு தீர்வாக நாடாளுமன்றத்தில் சிங்களவருக்கு ஐம்பது வீதமும் தமிழருக்கு ஐம்பது வீதமும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்ற நடைமுறைக்கு ஒவ்வாத கோசம் ஒன்றை முன்வைத்தது. அப்படி வைத்தாலும் அதற்காக உழைப்பதை விடுத்து, ஐ.தே.க. அரசுடன் இணைந்து அவ்வரசு மேற்கொண்ட தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், மலையக மக்களின் பிரஜாவுரிமை – வாக்குரிமையைப் பறித்தமை போன்ற அனைத்து தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கும் முழு ஆதரவு வழங்கியது.*

*பொன்னம்பலத்தின் தலைமை தவறு என்று சொல்லி தமிழரசுக் கட்சியைத் தொடங்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்றோர் முதலில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக சமஸ்டி கொள்கையை முன்வைத்தனர் அப்படி வைத்தாலும் அதற்காக உழைக்காது தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளுடனும் பேரம் பேசுவதிலேயே தமது நேரத்தைச் செலவிட்டனர். அவர்களும் ஒரு கட்டத்தில் ஐ.தே.க. அரசுடன் இணைந்து ஆட்சியின் பங்காளர்கள் ஆனார்கள். ஆனால் அவர்களது யுக்தி எதுவும் பலிக்காததால், கையறு நிலையில் எவ்வித திட்டமும் இன்றி கடைசியில் தனிநாடு கோசத்தை முன்வைத்தார்கள்.*

*தமிழரசுக் கட்சி தனிநாட்டுக் கோசத்தை முன்வைத்தாலும் அதற்காக ஒரு சிறு துரும்பைத் தன்னும் எடுத்துப் போடாமல் இளைஞர்களை முன்னே தள்ளி விட்டுவிட்டு தாம் பின்னே இருந்து கொண்டார்கள். அதன் காரணமாக தமிழ் இளைஞர்களின் போதிய அரசியல் ஞானமும், திட்டமும் இல்லாத ஆயுதப் போராட்டம் 30 வருட அழிவுகளுக்குப் பின்னர் 2009இல் முள்ளிவாய்க்கால் அழிவில் முற்றுப் பெற்றது.*

*இதன் பின்னர் தமிழ் தலைமை (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) மீண்டும் ஒரு அரசியல் சூதாட்டத்தில் இறங்கியது. தாம் பிரிவினை கோரவில்லை என்றும், ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண விரும்புவதாகவும் கூறி இன்றைய அரசாங்கத்தைப் பதவிக்கும் கொண்டு வந்தனர். இனப் பிரச்சினைத் தீர்வுக்கு வழியாக வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து அதன் அடிப்படையில் சமஸ்டி தீர்வை அரசாங்கம் வழங்க வேண்டும் எனக் கோரினர். வடக்கு கிழக்கை இணைக்க முஸ்லீம் மக்கள் ஒருபோதும் இணங்கார் என்பதையோ, எந்த வடிவிலேனும் தமிழர்களுக்கு சமஸ்டி முறையிலான தீர்வு ஒன்றை வழங்குவதற்கு சிங்கள மக்கள் இணங்கார் என்பதையோ தமிழ் தேசியக் கூட்டமைப்பு சிந்தித்துப் பார்க்கவில்லை அல்லது தெரிந்தும் வழமைபோல விதண்டாவாத அரசியல் பாதையைத் தேர்ந்தெடுத்தனர்.*

*ஆனால் இன்றைய அரசாங்கத்தின் இரு பங்காளிக் கட்சிகளும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்பதை பல தடவைகள் தெளிவுபடுத்திவிட்டார்கள். ஐ.தே.கவின் நிலைப்பாட்டை – அதாவது ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்பதையும், எந்தக் காரணம் கொண்டு சமஸ்டி தீர்வு வழங்கப்படமாட்டாது என்பதையும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அக்கட்சியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்லவும் பல தடவைகள் கூறியிருக்கின்றனர். அதுமட்டுமின்றி அண்மையில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றிலும், இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு எல்லையும், வரையறையும் உண்டு எனவும் பிரதமர் ரணில் கூறியிருப்பதுடன், இராணுவம் கைப்பற்றிய தமிழர்களின் காணிகளை விடுவிப்பதே இனப் பிரச்சினைத் தீர்வின் ஓர் அங்கம்தான் என கோமாளித்தனமாகவும் தெரிவித்திருக்கிறார்.*

*இந்த விடயத்தில் ஜனாதிபதி மைத்திரி எதுவும் கூறாமல் பெரும்பாலான சமயங்களில் தந்திரமாக நடந்து கொண்டாலும், இராணுவ முகாம் நிகழ்வு ஒன்றிலும், திரிகோணமலையில் நடைபெற்ற பௌத்த விகாரை நிகழ்வொன்றிலும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்றும், 1972ஆம் ஆண்டின் அரசியலமைப்பு அம்சங்கள் தொடரும் என்றும் தெளிவாகக் கூறியிருக்கிறார்.*

*அதுமட்டுமின்றி, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரும், இன்றைய அரசின் அமைச்சர்களில் ஒருவருமான நிமால் சிறிபால சில்வா அண்மையில் கண்டியில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமாக தமது கட்சி மூன்று விடயங்களில் விட்டுக் கொடுக்காது என உறுதிபடத் தெரிவித்திருக்கிறார். அந்த மூன்றும் வருமாறு: பௌத்த மதத்திற்கு முன்னுரிமை, ஒற்றையாட்சியை விட்டுக் கொடுக்காதிருத்தல், எந்தவிதமான சமஸ்டி அமைப்பையும் வழங்காதிருத்தல் என்பவையாகும்.*

கட்சியின் இன்னொரு சிரேஸ்ட தலைவரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவும் அண்மையில் ஊடகவியலாளர்களிடம் விளக்கமளிக்கையில், புதிய அரசியல் அமைப்பிலும் தற்போதுள்ள ஒற்றையாட்சி முறையே பேணப்படும் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். இந்த இரண்டு அமைச்சர்களும் தமது கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியின்றி இப்படியான கருத்துக்களைக் கூறியிருக்க முடியாது.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியைப் பொறுத்தவரை அவர்கள் ஆரம்பத்திலிருந்தே ஒற்றையாட்சி நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறார்கள் என்பதால் புதிதாகப் பேசுவதற்கு எதுவும் இல்லை.

இந்த நிலைமைகளைப் புரிந்து கொண்டபடியால்தான், தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் "ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு" என்றும், அவரது சகா எம்.ஏ.சுமந்திரன், "வடக்கு கிழக்கு இணைப்பு இப்போதைக்கு சாத்தியம் இல்லை" என்றும் புதிய சுருதியில் பேச ஆரம்பித்துள்ளனர். அப்படியானால் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ன வடிவத்தில் என்பதை இவர்கள் விளக்கியிருக்க வேண்டும். ஆனால் அதையும் இவர்கள் செய்யவில்லை.

இவையெல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், தற்போதுள்ள மாகாணசபை முறைமையையே அரசாங்கம் இனப் பிரச்சினைத் தீர்வாக முன்வைக்க இருக்கிறது என்பது தெளிவாகின்றது. இப்படியான ஒரு தீர்வை முன்வைப்பதை கூட்டு எதிரணியும் ஆதரிக்க வாய்ப்புள்ளது. இந்த முறைமையைக் கொண்டுவர ஆதரவளித்த இந்தியாவின் நிலைப்பாடும் அதுவேதான். இன்றுள்ள சூழ்நிலையில் நாட்டின் அனைத்து இன மக்களும் ஓரளவு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாகவும் அதுவே இருக்கின்றது.

எனவே போர் முடிவுற்ற நாளிலிருந்து மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்துடன் இணக்கமான பேச்சுவார்த்தை எதனையும் நடத்தாமல் மல்லுக்கட்டி வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு, மைத்திரி – ரணில் அரசாங்கத்தின் மூலம் தமிழர்களுக்கு சமஸ்டி தீர்வைப் பெற்றுத் தரப்போவதாக மாய்மாலம் காட்டி, அந்த அரசை நிரந்தனை ஏதுமின்றி ஆதரித்து வந்ததின் பலாபலன் மாகாணசபைத் தீர்வு மட்டுமே.

கடந்த அரசாங்க காலத்தின் போது தமிழ் மக்கள் சார்பாக அரசில் அங்கம் வகித்த டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, 'மாகாணசபை முறைமையை ஒரு தொடக்கப் புள்ளியாகக் கொண்டு இனப்பிரச்சினை தீர்வுக்காக உழைக்க முன்வாருங்கள்' என்று அழைத்த போது அவரை "துரோகி" என வர்ணித்த கூட்டமைப்பினர் இப்பொழுது அந்த முறையையே அறுதியும் இறுதியுமான தீர்வாக ஏற்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மறுபக்கத்தில் இனப் பிரச்சினைக்கு நியாயமான நிரந்தரமான தீர்வைக் காண்போம் என தமிழ் மக்களை ஏமாற்றி கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின் போதும் அவர்களின் வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய மைத்திரி – ரணில் குழுவினர் இதற்கு மேல் எதனையும் செய்யப் போவதில்லை என்ற நிலையே உள்ளது.

மாகாணசபை முறைமையைத் தன்னும் அரசும் கூட்டமைப்பும் சேர்ந்து உண்மையாக நடைமுறைப்படுத்தினார்கள் என்றால் அதுகூட பரவாயில்லை. ஆனால் கூட்டமைப்பினர் ஒருபக்கத்தில் தமக்குப் பிடித்தமான இன்றைய நவ தாராளவாத அரசை ஆதரித்துக் கொண்டு, மறுபக்கத்தில் இந்த அரசு தமிழருக்கு நிறையச் செய்ய இருந்ததாகவும், ஆனால் மகிந்த தலைமையிலான சிங்கள இனவாதிகள் குழப்பிவிட்டதாகவும் வழமைபோல தமது பிரச்சாரத்தைச் செய்துகொண்டு அரசியல் பிழைப்பு நடாத்தவே முற்படுவர் என்பது திண்ணம்.

மகிந்த தரப்பினர் எதிர்ப்பு கிளப்பினாலும், நாடாளுமன்றத்தில் வரவு செலவு திட்டம் மற்றும் பல்வேறு வகைச் சட்டங்களை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியது போன்று இனப் பிரச்சினை விடயத்திலும் தாங்கள் விரும்பும் தீர்வை அரசைக் கொண்டு நிறைவேற்றலாம் தானே என்று யாராவது கேட்டால் அதற்கு கூட்டமைப்பினரிடம் எந்தப் பதிலும் இருக்காது.

மொத்தத்தில் ஆராய்ந்து பார்த்தால், தற்பொழுது கொண்டு வரப்பட்டுள்ள புதிய அரசியல் அமைப்பிலும் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதுவும் முன்வைக்கப்படப் போவதில்லை. பழைய ஒற்றையாட்சி அமைப்பே புதிய வகையில் நிலை நிறுத்தப்படப் போகின்றது.

இதற்கான உண்மையான காரணம், பலரும் கருதுவது போல புதிய அரசியல் அமைப்பு என்பது இனப் பிரச்சினைத் தீர்வுக்காக கொண்டு வரப்படவில்லை. அதன் பிரதான நோக்கம் தற்போது பதவியில் உள்ள முதலாளித்துவ நவ – தாராளவாத அரசு மேலும் மேலும் சர்வதேச முதலாளித்துவ சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து செயற்படுவதற்கான தடைகளை நீக்குவதற்காகவே கொண்டுவரப்படுகிறது. இது கூட்டமைப்பினருக்கும் தெரியும். இருந்தாலும் தமிழர் பிரச்சினைத் தீர்வைவிட இன்றைய நவ – தாராளவாத அரசைப் பாதுகாப்பதே அவர்களது நோக்கம் என்பதால், அவர்கள் அரசுடன் தொடர்ந்தும் ஒத்துழைப்பார்களேயொழிய, தமிழ் மக்கள் பிரச்சினைத் தீர்வுக்காக இன்றைய அரசுடன் போராடப் போவதில்லை.

எனவே தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தைத் தொடர்வதானால், தமிழ் முற்போக்கு - ஜனநாயக சக்திகள் அதைத் தமது கையில் எடுத்துப் போராடுவதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை.

---

**புரட்சி என்பது ரோஜாக்களால் ஆன மெத்தை அல்ல. அது நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் இடையேயான போராட்டம்**

---

**நான் குற்றவாளி என்று தீர்ப்பளியுங்கள். அதற்கு எந்த முக்கியத்துவமும் இருக்காது. ஏனெனில், வரலாறு என்னை குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கும்**

**- ஃபிடல் காஸ்ட்ரோ**

# அரசாங்கம் அணிசேராக் கொள்கையிலிருந்து மேலும் மேலும் விலகிச் செல்கிறது!


இலங்கையின் தற்போதைய அரசாங்கம், நாடு நீண்டகாலமாகப் பின்பற்றி வந்த அணிசேராக் கொள்கையிலிருந்து விலகி மேற்கத்தைய சார்புக் கொள்கையை நோக்கி மேலும் மேலும் சரிந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் பாகிஸ்தானுடன் உள்ள எல்லைப் பிரச்சினையைக் காரணம் காட்டி இந்தியாவின் வலதுசாரி பாரதீய ஜனதா கட்சி அரசாங்கம் இஸ்லாமாபாத்தில் நடைபெறவிருந்த தென்னாசிய நாடுகளின் கூட்டமைப்பான 'சார்க்' அமைப்பின் உச்சி மாநாட்டைப் பகிஸ்கரித்தது.

இராஜதந்திர நெறிமுறைகளுக்கு மாறான மோடி அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை எந்தவித தர்க்க ரீதியிலான காரணங்களும் முகாந்திரமும் இன்றி இலங்கை அரசாங்கமும் பின்பற்றிக் கொண்டு சார்க் மாநாட்டை தானும் பகிஸ்கரித்தது. இந்தியாவைப் போன்றே பாகிஸ்தானும் இலங்கையின் நெருங்கிய நட்பு நாடு என்பதையோ, புலிப் பாசிசவாதிகளுக்கு எதிரான போரில் பாகிஸ்தான் நிபந்தனை ஏதுமின்றி இலங்கைக்கு தாராளமாக உதவியதையோ மைத்திரி — ரணில் அரசு இந்தச் சந்தர்ப்பத்தில் கணக்கில் எடுக்கவில்லை.

1962இல் இந்திய — சீன எல்லைப் போர் நிகழ்ந்த போதும், 1971இல் கிழக்கு பாகிஸ்தானில் (இன்றைய பங்களாதேஸ்) இந்தியாவும், பாகிஸ்தானும் மோதிக்கொண்ட போதும், சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கடையிலும் அப்போதைய பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க பின்பற்றிய மதியூகம் மிக்க இராஜதந்திர செயல்பாடுகளை அவரின் வாரிசு என்று சொல்லிக் கொள்ளும் இன்றைய ஜனாதிபதி மைத்திரி சிறிதும் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை.

இதுதவிர, சில வாரங்களுக்கு முன்னர் ஐ.நாவின் யுனெஸ்கோ அமைப்பில், ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலிய சியோனிச ஆக்கிரமிப்பாளர்கள் மேற்கொண்டு வரும் கலாச்சார அழிப்பு நடவடிக்கைகளைக் கண்டனம் செய்து தீர்மானம் ஒன்று




கொண்டு வரப்பட்ட போது, இந்தியா உட்பட சுமார் 200 நாடுகள் அத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

இந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசு முன்னைய அரசுகள் பின்பற்றிய பாலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டைக் கைவிட்டு, வாக்களிப்பிலிருந்து ஒதுங்கி நின்றதின் மூலம் இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளுக்கு ஆதரவாக நடந்து கொண்டது.

அண்மையில் இன்னொரு விடயத்திலும் 'நல்லாட்சி' அரசின் மேற்கத்தைய சார்புப் போக்கு அம்பலத்துக்கு வந்துள்ளது.

அணிசேரா இயக்கத்தின் 17ஆவது உச்சி மாநாடு அண்மையில் வெனிசூலாவில் நடைபெற்ற போது, அந்த மாநாட்டில் இலங்கையின் ஜனாதிபதியோ, பிரதமரோ, வெளிவிவகார அமைச்சரோ பங்குபற்றாததின் மூலம், மேலும் ஒரு அடி இலங்கை அணிசேராக் கொள்கையிலிருந்து விலகிச் செல்வதை நிரூபித்துள்ளது. (இந்தியப் பிரதமர் மோடியும் இதில் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது) சுமார் 16 நாடுகளின் தலைவர்களும், 60 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் பங்குபற்றிய அணிசேரா இயக்க உச்சி மாநாடு இலங்கையின் தற்போதைய அரசாங்கத்திற்கு மட்டும் முக்கியத்துவமில்லாமல் போய்விட்டது.

ஆனால் அணிசேரா இயக்கம் என்பது சாதாரண ஒரு அமைப்பு அல்ல. அது 120 நாடுகளை உறுப்பினர்களாகவும், 15 நாடுகளை பார்வையாளர்களாகவும் கொண்ட ஒரு அமைப்பு. உலக சனத்தொகையில் ஏறத்தாழ 45 சத வீதமான மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அமைப்பு. அந்த அமைப்பை உருவாக்குவதில் இலங்கைக்கும் ஒரு சிறப்பான வரலாற்றுப் பங்களிப்பு உண்டு.

அமெரிக்க — சோவியத் பனிப்போர் உச்சக் கட்டத்தில் இருந்த 1961ஆம் ஆண்டு இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

அமெரிக்க — சோவியத் வல்லரசுகளின் பிடியில் சிக்காமல் மூன்றாம் உலக நாடுகள் தமது விவகாரங்களை தாமே சுயமாகக் கையாளும் நோக்குடனேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. 1961இல் யூகோஸ்சிலோவாக்கியாவின் தலைநகர் பெல்கிரேட்டில் நடைபெற்ற இதன் முதலாவது ஸ்தாபக மாநாட்டில் பெரும்பாலும் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தலைவர்களான 13 நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றினர்.

அவர்களில் யூகோ ஜனாதிபதி மார்சல் டிட்டோ, இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, இந்தோனேசிய ஜனாதிபதி சுகர்ணோ, எகிப்திய அதிபர் கமால் அப்துல் நசார், கானா ஜனாதிபதி என்குறுமா ஆகியோருடன் நமது பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டில் பங்குபற்றினார். இதன் காரணமாக இலங்கையின் அந்தஸ்து சர்வதேச அளவில் உயர்ந்தது.

சிறீமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்த காலங்களில் அணிசேரா இயக்கத்தின நடவடிக்கைகளில் அவர் மிகவும் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தார். அதன் காரணமாக 1976இல் கொழும்பில் அணிசேரா இயக்கத்தின் உச்சி மாநாட்டை நடாத்தும் வாய்ப்பும் கிடைத்தது.

இத்தகைய கீர்த்திமிக்க வரலாற்றையும், அதில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த இலங்கையையும் அவமதிக்கும் விதத்தில்தான் இன்றைய இலங்கை அரசு தனது முக்கிய தலைவர்கள் யாரையும் வெனிசுலாவில் நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் 16ஆவது உச்சி மாநாட்டிற்கு அனுப்பாமல் புறக்கணித்திருக்கிறது. அதன் மூலம் மைத்திரி — ரணில் அரசு மேலும் மேலும் மேற்கு நோக்கிச் சரிவதை நிரூபித்திருக்கிறது.

**— இரத்தினம்**